Judicial Form No.53
(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**M.C.01/2024**

**2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08 ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் ம.சா. 2 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம.சா. | - | 2 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | மங்கையர்கரசி | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | தேவராஜ் | சமயம் | - | |
| கிராமம் | - | அண்ணாநகர் | வயது | - | 52/2025 |
| சாதி | - | | | | |

**08-08-2025**

குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி

1-ம் மனுதாரருக்கும், எதிர்மனதாரருக்கும் பெரியோர்களால் நிச்சயக்கப்பட்டு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எந்த தேதியில் எங்கு வைத்து திருமணம் நடந்தது என்றால் தேதி நினைவில் இல்லை. சிறுகுன்றா மாகாளியம்மன் கோவிலில் நடந்தது. அவர்களுக்கு எத்தனை குழந்தைகள் உள்ளது என்றால் 2 குழந்தைகள் இருக்கிறார்கள். முதல் குழந்தை பிறந்த தேதி என்ன என்றால் மேமாதம் 2017-ஆம் ஆண்டு பிறந்தார். தேதி நினைவில் இல்லை. 2-வது குழந்தை பிறந்த தேதி என்ன என்றால் ஜுன் 29 -ல் பிறந்தார் வருடம் நினைவில் இல்லை. கொரோனா காலகட்டத்தில் பிறந்தார். எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையில் என்ன சொல்லியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிர்மனுதாரர் 1-ம் மனுதாரரை அடித்து கொடுமைப்படுத்தியதாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் புகார் கொடுத்தோம். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் நாங்கள் அடித்ததாக எங்கள் மீது புகார் கொடுத்து அதில் எங்களை காவல் நிலையத்தில் அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் வரதட்சணை கேட்டு கொடுமை செய்ததாக மகளீர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. எனது மகள் எங்களுடன் எங்கள் வீட்டில் இருக்கிறார் என்றால் சரிதான். எதிர்மனுதாரரை பிரிந்து வந்த காலகட்டத்தில் இருந்து 1-ம் மனுதாரர் எங்களுடன் எங்கள் வீட்டில் இருந்து வருகிறார் என்றாலும் வாடகை வீட்டில் இல்லை என்றாலும் சரிதான். நான் எஸ்டேட் கூலி வேலை செய்துவருகிறேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரரும் எஸ்டேட் கூலி வேலை செய்து வருகிறார் என்றால் நிரந்தர தொழிலாளியாக வேலை செய்து வருகிறார். எஸ்டேட்டை பொருத்தவரை நிரந்தர தொழிலாளி, தற்காலிக தொழிலாளி இருதரப்பிற்கும் ஒரே சம்பளம் என்றால் சரிதான். இன்று ஒரு தொழிலாளிக்கு தினக்கூலி 445 ரூபாய் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் மாதம் ரூ.20,000/- ஆயிரம் வருமானம் பெறுவதற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு தென்காசி மாவட்டத்தில் நிலம், வீடு இருப்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

மனுதாரர்களுக்கு கேட்கக்கூடிய ஜீவனாம்சம் அதிக தொகை என்பதால் எதிர்மனுதாரரால் கொடுக்க இயலாது என்றால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.